**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 87/2024**

Deposition of the PW3

Name : ஆன்றனி

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date :10.11.2025.

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினர் . வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். (ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை)

**குறுக்கு விசாரணை**

எனது ஊர் எது என்றால் தலக்குளம் ஆகும். வாதி எனக்கு உறவினரா என்றால் தெரிந்தவர் ஆவார். இந்த வழக்கின் விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். ஓரளவு விவரம் தெரியும் என்றால் என்ன விவரம் தெரியும் என்றால் 10.07.2001 தேதியில் வாதியின் தாயார் குளிக்க செல்வதாக கூறி விட்டு சென்றார், பின்பு எங்கு சென்றார் என்று தெரியாது. 2001 லிருந்து 2023 வரை வாதியின் தாயார் காணவில்லையென்று புகார் கொடுத்ததின் அடிப்படையில் என்ன நடவடிக்கை

எடுத்துள்ளார்கள் என்ற விவரத்தை கடந்த 23 வருடத்தில் எப்போதாவது காவல்நிலையத்தில் சென்று வாதி விசாரித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் விசாரித்துள்ளார், நானும் உடன் சென்றேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் புகார் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வழக்கிற்கு தேவையான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் அனைவருக்கும் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் தேவையான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாதி என்ன படித்துள்ளார் என்றால் வாதி என்ன படித்துள்ளார் என்ற விவரம் தெரியாது. வாதி யார் என்றால் எனக்கு தெரியாது. நான் எனக்கு தெரியாத சங்கதிகளை பொறுத்து வாதிக்கு வேண்டி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்